அமெ. ஏகாதிபத்தியத்திற்கு சீனுவின் அறைகூவல்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா, இலங்கையில் 10 சதம் | சென்னை: புரட்டாசி 16உ சனி (2—10—54) | வெளியூர்: புரட்டாசி 17உ ஞாயிறு (3—10—54) | மலர்: 2 | இதழ்: 95

'பார்மோசா தீவு விடுவிக்கப்படும் வரை ஓய்ந்திருக்கமாட்டோம்!'

பாதுகாப்பு அமைச்சரின் போர் முரசு!

'புனிதமான செயல்' எனப் படையினருக்குப் போதனை!

சீன மக்களால் விரட்டியடிக்கப்பட்ட சியாங்-கே-ஷேக், எஞ்சிய தனது படை பலத்துடன், பார்மோசா தீவில், தருணம் பார்த்துக்கொண்டு இருக்கிறார், சீனாமீது பாய!

அவருடைய அற்ப ஆசைக்கு, அமெரிக்காவின் ஒத்துழைப்பே அடிப்படை காரணமாகும்.

எப்படியும் பார்மோசாவை விடுவித்து, சீனாவுடன் முன்போல் இணைத்துக் கொள்வது என சீனம் உறுதி கொண்டு இருக்கிறது.

புதிய சீனத்தின் ஐந்தாண்டு நிறைவு விழாவைக் கொண்டாட, பீகிங் நகரில் கூடிய மாபெரும் அணிவகுப்பில், பாதுகாப்பு அமைச்சரான பெங்-தே-உவாய், சீனப் படையினரை நோக்கி, 'அவசரமான தாக்குதல் பணி'க்குத் தயாராகிக் கொள்ளும்படியும், பார்மோசாவை விடுவிப்பது தங்களுடைய 'புனிதமான செயல்' எனக் கொள்ளும்படியும் முரசறைந்துள்ளார்.

அணிவகுப்பில் சீனத் தலைவரான மா-சே-துங், பிரதமரான சூ-யென்-லாய், மற்ற முக்கிய அதிகாரிகளும் இருந்தனர்.

மாவோ, விழா மேடைக்கு வந்ததும், அவரைத் தொடர்ந்து சோவியத் சர்க்கார் சார்பில் கம்யூனிஸ்டு கட்சித் தலைவரான நிகிடா குருஷாவுடன் வந்துள்ள தூதுக் குழு மேடைக்கு வந்தது.

சென்ற வாரத்தில்தான் நியமிக்கப்பட்ட பாதுகாப்பு மந்திரியான பெங் 'சியாங்-கே-ஷேக்காலும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளாலும் அடிமையாக்கப்பட்டு, களவாடப்பட்ட நிலப்பரப்பில் வைக்கப்பட்டுள்ள நமது மக்களை விடுவிக்க நமது முயற்சிகளை வலிவுள்ளதாக்கிக்கொள்ள வேண்டும்' எனவும் 'விழிப்பை விரிவாக்கிக்கொள்ளுங்கள்; புதிய போர்க் கருவிகளைக் கையாளும் சிறந்த பயிற்சி பெறுங்கள்; சோவியத் ரஷ்யாவின் முதிர்ந்த அனுபவத்தைப் பின்பற்றி வருந்திக் கற்றுக் கொள்ளுங்கள்,' எனவும், அணிவகுப்பில் பங்கு கொண்ட படையினருக்கும் போதித்தார்.

நீக்ரோ மாணவர்களைப் பொதுப் பள்ளிகளில் சேர்க்கக் கூடாதாம்!

இந்தப் பாகுபாடு அரசியல் சட்டத்திற்கு முரணானது என தீர்ப்பாகி இருக்கிறது!

அத்தீர்ப்பை மதிக்காது நிற வெறியர்கள் பேய்க்கூத்து!

அமெரிக்காவில் உள்ள மில் போர்ட் நகர உயர்நிலைப் பள்ளியில் ஏற்கனவே சேர்ந்து கல்வி பெற்றுவந்த 11 நீக்ரோ மாணவர்களை வெளியேற்றிவிட வேண்டுமென, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கல்விக் குழு தீர்மானித்திருக்கிறது.

அவசரமாகக் கூட்டப்பட்ட சிறப்புக் கூட்டத்தில் அக்கல்விக் குழு இத்தீர்மானத்தைச் செய்திருக்கிறது. மொத்த நீக்ரோ சமூகத்தின் நன்மைக்காகவும் மாணவர்களின் நலத்திற்காகவுமே மேற்கண்ட முடிவிற்கு வந்திருப்பதாக அக்கல்விக் குழு சமாதானம் கூறி இருக்கிறது.

வெள்ளை நிறத்தவர்களுக்கு மட்டுமே நடைபெற்று வந்த அப்பள்ளியில், நீக்ரோ குழந்தைகளையும் சேர்த்துக் கொள்ளப்பட்டதை எதிர்க்கும் அறிகுறியாகத் தங்கள் பிள்ளைகளை வெள்ளையர்கள் அனுப்ப மறுத்தனராம்.

வெள்ளை-கருப்பு எனப் பள்ளிகளில் பாகுபாடு காட்டுவது அமெரிக்க அரசியல் சட்டத்திற்கு முரணானது என, இவ்வாண்டு துவக்கத்தில் அமெரிக்க சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

9 வல்லரசுகள் மாநாட்டில் முட்டுக்கட்டை

ஜெர்மன் ஆயுதக் கட்டுப்பாடு பிரச்சினைபற்றி நடைபெற்றுவரும் 9 வல்லரசுகள் மாநாட்டில், பிரான்சின் பொது ஐரோப்பிய ஆயுதத் திட்டத்தைப் பற்றி நடைபெற்ற ஆலோசனைகள் தமக்குத் திருப்தியளிக்கவில்லை என்று மென்டிஸ் பிரான்ஸ் கூறியதன் காரணமாக, மாநாட்டில் ஓர் பெரிய முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

தென் ரொடீஷியாவில் — நிறவெறி தாண்டவம்!

இந்திய அதிகாரிக்கு ஏற்பட்ட அவமரியாதை!

தென் ரொடீஷியாவில் உள்ள இந்தியத் தூதுவர் இரண்டாவது காரியதரிசியும், அவர் மனைவியும் சினிமா பார்ப்பது போன்ற செயல்களை மேற்கொள்ளுவதிலிருந்து தடுக்கப்பட்டார்கள். அவருடைய மனைவி, அங்குள்ள கடைகளில்கூட நுழைவது கூடாதெனத் தடுக்கப்பட்டுள்ளார். நிறவெறியே இவைகளுக்கான காரணமாகும்.

இதை இலங்கை மக்கள் சபை உறுப்பினர் ஒருவர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

தென் ஆப்பிரிக்காவில் இதுபோன்ற அக்கிரமம் நிகழ்ந்திருந்தால் அது எதிர்பார்க்கக் கூடியதேயாகும் எனவும், ஆனால் தென் ரொடீஷியாவின் ஆசியர்களைத் தடுப்பது என்றால், அதிலும் இந்தியத் தூதுவராலய அதிகாரி போன்றவர்களுக்குக் கூட சினிமா போன்ற பொது நிலையங்களுக்குச் செல்வது தடுக்கப்படுவது என்றால், அது உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகும் எனவும், அந்த உறுப்பினர் அறிவித்துள்ளார்.

இந்தியாவில் செயற்கை அரிசி உற்பத்தி

இந்த ஆண்டு இறுதியில் நிறைவு பெறுவதென முடிவுசெய்யப்பட்டுள்ள திட்டப்படி, தினந்தோறும் ஒரு டன் செயற்கை அரிசி உற்பத்தி செய்யப்படும் என்று மக்கள்சபையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போது சொல்லப்பட்டது.

அமெரிக்க அரசாங்கத்திற்கு இந்தியாவின் 'நோட்டீஸ்'

அமெரிக்க விமானப் போக்குவரத்தை உடனடியாக மூடிவிட வேண்டும்!

கல்கத்தா, அக். 1— இந்தியாவிற்குள்ளும், இந்தியா வழியாகவும் செல்லும் எல்லா அமெரிக்க விமானப் போக்குவரத்தையும் உடனடியாக மூடிவிட வேண்டும் என்று அமெரிக்க அரசாங்கத்திற்கு இந்திய அரசாங்கம் நோட்டீஸ் அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

இதற்குக் காரணம், அமெரிக்க, இந்திய அரசாங்கங்களிடையே, விமானப் போக்குவரத்திற்காகச் செய்யப்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

செங்கற்பட்டு மாவட்ட கழகத் தேர்தலில் தி. மு. கழகத் தோழர் வெற்றி

காங்கிரஸ் அபேட்சகர் மண் கவ்வினார்

மாதவரம் வட்ட தேர்தல் முடிவுகள்

(நமது நிருபர்)

சென்னை, அக். 2— செங்கற்பட்டு மாவட்டக் கழகத்திற்கு (ஜில்லாபோர்டு) கடந்த 25-9-54ல் நடைபெற்ற தேர்தலில் மாதவரம் தொகுதிக்கு திருவொற்றியூர் தி. மு கழகத் தோழரான எம். கணபதி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தோழர் கணபதி சுயேச்சையாகவும், தோழர் பக்தவத்சலம் என்பவர் காங்கிரசின் சார்பிலும் போட்டியிட்டனர்.

தாழ்த்தப்பட்டோர் தொகுதியில் கம்யூனிஸ்டு தோழர் மாதவன் என்பவர் வெற்றி பெற்றார்.

ஓட்டு விவரம்

பொதுத் தொகுதி

எம். கணபதி (சுயே)	5377
பக்தவத்சலம் (காங்)	4706

தனித் தொகுதி

சி. கே. மாதவன் (கம்)	4143
வீரராகவன் (காங்)	3742
பி. எஸ். கோபால் (தி-சே)	2975
மொத்தம் செல்லாத ஓட்டுகள்	1194

★

தோழர் எம். கணபதி திருவொற்றியூர் தி. மு. கழக அரும் பணியாளர்களில் ஒருவர். அவர் கடந்த ஜூலை 15-ல் தி. மு. கழகம் நடத்திய இரயில் நிறுத்த அறப்போரில் பங்கு பெற்று, மூன்று மாதம் சிறைத் தண்டனை பெற்று வேலூர் சிறையில் வைக்கப்பட்டிருந்தவர்.

அவரது வெற்றிக்கு சென்னை, மாதவரம், திருவொற்றியூர் ஆகிய ஊர் தி. மு. கழகத் தோழர்கள் பெரிதாக உழைத்தனர்.

எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்!

இந்தியாவுக்குத் தேவைப்படும் லட்சக் கணக்கான டாலர்கள் பெறுமானமுள்ள சுமார் 100 இரயில் எஞ்சின்களையும், 5,000 இரயில் பெட்டிகளையும் தயாரிக்க அமெரிக்கா, ஜப்பான் மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் ஆகியவை கண்டிராக்ட் எடுத்துக் கொள்ளுமென்று தெரிய வருகிறது.

ஆந்திர அரசு காட்டும் சலுகை!

சிறுநில சொந்தக்காரர்கள் வரி செலுத்த வேண்டியதில்லை

ஆந்திர மாநிலத்தில், ரூ. 10-க்குக் குறைவாக நிலவரி கட்டும் சிறு நிலச் சொந்தக்காரர்கள் இனிமேல் நிலவரி செலுத்த வேண்டாமென்று விதிவிலக்களித்திருப்பதாக ஆந்திர சர்க்கார் அறிவித்துள்ளது.

இந்த விதிவிலக்கின் காரணமாக ஆந்திராவிலுள்ள சுமார் 15 இலட்சம் விவசாயிகள் பயனடைவார்கள் என்றும், இதனால் ஆந்திர சர்க்காருக்கு நிலவரி வருமானத்திலிருந்து 1 கோடி ரூபாய் நஷ்டமாகும் என்றும் தெரியவருகிறது.

தற்சமயம் ஆந்திர சர்க்காருக்குக் கிடைக்கும் மொத்த வருமானம் ரூ. 21 கோடிகளாகும். இதில் 4 கோடி 78 இலட்சம் ரூபாய்கள் நிலவரியிலிருந்து கிடைக்கும் வருமானம் ஆகும்.

கட்டுப்பாடு தளர்ந்தது!

மாநில சர்க்கார்கள் விரும்புகிற அளவுக்கு, உணவு கட்டுப்பாட்டினை நீக்க, அவைகளுக்கு மத்திய சர்க்கார் அதிகாரம் அளிக்க முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 2-10-54 சனி

மாற்ற முடியாத முடை நாற்றம்!

தொழு நோய் போன்ற கொடிய நோய்களைத் தடுப்பதற்கோ, அல்லது சிகிச்சை செய்வதற்கோ மருத்துவத் துறையில் இன்னமும் வெற்றி ஏற்படவில்லை. இதுவரை குறிப்பிட்ட அத்துறையில் வெற்றி கிட்டவில்லை என்பதற்காக, மருத்துவ நிபுணர்கள், தாங்கள் மேற்கொண்டுள்ள முயற்சியைக் கைவிட்டு விடவுமில்லை. மனமுடைந்து விடாமல், அந்நோயைக் கருவறுக்க, அந்நிபுணர்கள் மேலும் மேலும் தீவிரமாக முயன்று வருகின்றனர். என்றைக்காவது தங்கள் முயற்சிக்கு வெற்றி கிடைக்கும் என்ற நிச்சயமும் அவர்களுக்கு அசைக்க முடியாத அளவுக்கு இருந்து வருகிறது.

ஆனால், கொடிய தொழு நோயைக் காட்டிலும், நூறு மடங்கு-ஏன்-ஆயிரம் மடங்கு கடுமையானதோர் கொடிய 'ஊழல் தொழு நோய்' பண்டித ஜவகரின் ஆட்சியை உடும்புப் பிடியாகப் பற்றிக்கொண்டு இருக்கிறது. தொழு நோயைப் போக்க, மருத்துவ நிபுணர்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியிலும், தோல்வி மேல் தோல்வி ஏற்பட்ட போதிலும், தங்கள் முயற்சியைக் கைவிட்டு சலித்துவிடாமல், தொடர்ந்து அம்முயற்சியில் ஈடுபட்டு வருவதைத்தான் நாம் கண்டும் கேட்டும் இருக்கிறோம். இந்த விடாமுயற்சிக்கும், பண்டிதர் சர்க்காருக்கும் நெடுந்தூரம் என்றுதான் உறுதியாகச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. தமது நிர்வாகத்தில் ஏற்படுகின்ற ஊழல்களை உடனடியாகக் களைந்து, அத்தகு ஊழல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த ஒழுக்கம் கெட்டவர்களை சட்டமும் கோரும் அறநெறிப்படி தண்டித்து, மேலும் அதுபோன்ற ஊழல்கள் திரும்பவும் தம் நிர்வாகத்தில் நடைபெற ஒட்டாமல் விழிப்பாகப் பார்த்துக் கொள்வதுதான், ஒரு சிறந்த தலைமை நிர்வாகத்தின் இலட்சணமாகும்.

இந்த இலட்சணம், பண்டிதரின் நிர்வாகத் துறையில் அணுவளவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு நிர்வாகத்திற்குச் சிறப்பாகக், கண்டிப்பாக இருக்கத் தீர வேண்டிய இந்த இலட்சணத்திற்கு பதில், பண்டிதரின் நிர்வாகம் ஊழல் போட்டியில் வெற்றிமேல் வெற்றி கண்டு, அவலட்சணமாகக் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது.

தொழு நோயைப் போக்க மருந்து தேடும் மருத்துவ நிபுணர்கள், முடிந்த வெற்றி பெறவில்லையானாலும், அவர்களுடைய மெய்வருந்தும் விடாமுயற்சிக்காக, அவர்களை ஜெயமடைந்தவர்கள் பாராட்டுகின்றனர்.

பண்டிதர் சர்க்காரோ, தமது நிர்வாகத்தில், அடுத்தடுத்து அடுக்கடுக்காக நிகழ்ந்து வரும் ஊழல்களைக் களைவதற்கான, சிறு முயற்சியை மேற்கொள்ளக்கூட முன்வராத நிலையில், விஷயம் தெரிந்தவர்கள் அவர் சர்க்காரைப் பாராட்டுவர் என எப்படி எதிர்பார்ப்பது?

தமது ஆட்சி நிர்வாகத்தில் புற்றீசல்போல் ஊழல்கள் பல்கிப் பெருகுவதாக இருந்தாலும் பாதகமில்லை, தம் புகழ் மட்டும் உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும் பரவினால் போதும்; அதற்கான வகையில் பெரு முயற்சி செய்து அப்புகழை எப்படியாவது பெற்றுவிட வேணும் என்று பண்டிதர் முடிவு கட்டிக் கொண்டு இருப்பதால்தான், ஒரு இனத்தில் ஊழல் ஏற்படும்போதே, அதை முளையிலேயே கிள்ளியெறிந்து நிர்வாகத்தை ஒழுங்காக்க வேண்டும் எனக் கவலை கொள்ளாமல், காலம் கழித்து வருகிறார் போலும்! இந்தக் கவலையற்றத்தனம், அலட்சியப் போக்கு; ஒரு ஆட்சியை எந்த அளவு, எவ்வளவு விரைவில் தேய்த்துவிடும் என்பதை காசி க்ஷேத்திரத்தைக் காணச் சென்ற அமெரிக்கர்கள் அங்கு எழும் துர்நாற்றத்தை மூக்கைப் பிடித்துக்கொண்டு வேதனைப்படவும், வரலாறு தெரிந்த பண்டிதருக்கு அங்கு வீசும் துர்நாற்றம் தெரிந்தாலும் அவ்விடத்தின் முன்னாள் வரலாற்றுப் பெருமையை நினைத்து நினைத்து மகிழும் அளவு வரலாற்றுச் சுவை உணர்ந்துள்ள பண்டிதர் அறியார் என எவரும் கூறத் துணியார்.

ஒரு நாட்டின் சிறந்த வரலாறு, அந்நாட்டின் கொடி, பிறநாடுகளில் விண் முட்டக் கம்பீரமாகப் பறந்து கொண்டிருப்பதினாலோ, தூதுவர்கள் தினம் தினம் கேளிக்கைகள் நடத்திக் கொண்டு இருப்பதினாலோ, அவசியமிருந்தாலும் இல்லாமற் போனாலும் நல்லெண்ணத் தூதுக் குழுக்களை இடைவிடாது பிற நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டு இருப்பதினாலோ, மற்ற நாட்டுப் பிரமுகர்களை வலிய அழைத்து விருந்துபசாரம் செய்து, 'அவர் புகழ, நாம் மகிழ' என்ற போக்கில் கோலோச்சிக்கொண்டு இருப்பதினாலோ அமைவது இல்லை. இதற்கான சான்று எதுவும், எந்த நாட்டு வரலாற்றிலும் இல்லை.

ஒரு ஆட்சியின் பணி புரியும் நிர்வாக அதிகாரிகள் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலும், பிறர் பழிப்புக்கு இடமில்லாமல் இருந்தால்தான் ஒரு ஆட்சி சிறந்த ஆட்சியென அறிவுடையோர் பாராட்டுவர்—சொல்வர். அத்தகைய உயர்ந்த ஒழுக்கமுடைய அதிகாரிகளை நிர்வாகத்திலமர்த்தி ஆட்சி புரியும், ஒரு தலைவரைத்தான், அவர் எப்பதவியிலிருப்பவராக இருந்தாலும், புகழ், அவரைத்தானே சென்று அடையும். நேரு பண்டிதரோ, மேலும் மேலும் தொடர்ந்து ஊழல் நடந்து வருவதைக் கண்டும் காணாதவர் போன்றும், நிகழ்ந்துள்ள ஊழல்களின் பட்டியலை நீட்டினால் பொருத்தமற்ற ஏதோ கூறி, மழுப்பியும், காலம் கடத்தி வருகிறார். தொடர்ந்து நிகழ்ந்துவரும் ஊழல்கள், அதை மூடி மறைக்கப் பண்டிதர் போடும் பாய்த்திரை, அவருடைய நிர்வாக ஆற்றலை அறிந்து கொள்வதற்குப் போதுமானதாகும். அவருடைய ஆட்சியில் ஏற்பட்டு வரும் ஊழல் சம்பவங்கள், மாற்று காணமுடியாத அளவு முடை நாற்றம் வீசத் தொடங்கியுள்ளன. நாளை அது பற்றி விரிவாக எழுதுவோம்.

கோளங்களுக்கு இடையே பிரயாணம்

ரஷ்ய விஞ்ஞானிகள் கருவி அமைக்கின்றனர்

சோவியத் விஞ்ஞானிகள் வானில் 240 மைல் உயரத்திற்கு 'ராக்கெட்'களை அனுப்புகிறார்கள் என்று மாஸ்கோ வானொலி மூலம் தெரியவருகிறது.

சோவியத் ராக்கெட் நிபுணரான பேராசிரியர் டிகான்ரவோவ் என்பவர் வானத்தில் சஞ்சாரம் செய்ய நடைபெறும் ஏற்பாடுகள் பற்றி விடுத்துள்ள அறிக்கை ஒன்றை மாஸ்கோ வானொலி எடுத்துக் காட்டியது.

சோவியத் விஞ்ஞானியான பேராசிரியர் கொன்ஸ்டின் சிலோகோவ் என்பவர், விஞ்ஞான முறைப்படி கோளங்களுக்கிடையே பிரயாணம் செய்வது பற்றி ஆராய்ச்சி செய்கிறார் என்று தெரிகிறது.

இவர் கோளங்களுக்கிடையே பிரயாணம் செய்யத் தகுதி பெற்ற கருவி ஒன்றை அமைத்திருக்கிறார் என்றும், பேராசிரியர் டிகான்ரவோவ் கூறியுள்ளார்.

(சென்ற மே திங்களில் அமெரிக்காவில் ராக்கெட் ஒன்று 158 மைல்கள் உயரச் சென்றது என்பதுதான் அதிகமான உயரம் சென்ற ராக்கெட் என்று இதுவரை கருதப்பட்டு வந்தது)

காஞ்சியில் சைகிள் ரிக்ஷாவிற்கு தடை

60 ஆயிரம் பேர் வேலை இழப்பர்

காஞ்சி நகரில் வருகிற டிசம்பர் முதல் சைக்கிள் ரிக்ஷாக்களை காண முடியாதாம்.

தினம் சுமார் 1 லட்சம் பேர் உபயோகிக்கிற அந்த சைக்கிள் ரிக்ஷா போக்குவரத்தை தடை செய்திட அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

சைகிள் ரிக்ஷா போக்குவரத்தினால் ஏராளமான விபத்துக்கள் ஏற்படுவதாயும், ரிக்ஷா இழுப்பவர்களிடையே நோய் பரவி வருவதாகவும் இந்தத் தடைக்கு காரணம் சொல்லப்படுகிறது.

12,000 பேருக்கு இந்தத் தடையினால் வேலை இல்லாமல் போகும். அதை ஒட்டி, ரிக்ஷா தொழிலில் ஈடுபட்டிருக்கும் சுமார் 60 ஆயிரம் பேர் வேலை இழந்து தவிப்பர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆந்திரா புகையிலை உற்பத்திக்கு உலை

மத்திய சர்க்கார் துணிந்து யோசனை கூறுகிறது!

புதுடில்லி, செப். 30—

ஆந்திராவில் உற்பத்தி செய்யப்பட்டுவரும் மொத்தப் புகையிலையில், 25 சதவிகிதத்தைக் குறைத்துக் கொள்ளுமாறு ஆந்திர சர்க்காரைக் கேட்டுக்கொண்டு இருப்பதாக யூனியன் விவசாய மந்திரி டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்முக், மக்கள் சபையில் அறிவித்தார்.

இந்தியாவில் பயன்படுத்தப்பட்டுவரும் புகையிலையின் அளவுக்கு அதிகமாக இங்கு உற்பத்தி செய்யப்பட்டு வருவதன் காரணமாகவே, இத்தகு யோசனை ஆந்திர சர்க்காருக்குக் கூறப்பட்டுள்ளதாக, அவர் மேலும் விளக்கம் தந்துள்ளார்.

உள்நாட்டில் மட்டரகமான புகையிலையையே உற்பத்தி செய்யப்படுவதால்தான், இத்தகைய உற்பத்திக் குறைப்பு அவசியமாகிறது என அவர் அறிவித்தார்.

உத்திர பிரதேசத்தில் புகையிலை உற்பத்திக்கு ஆராய்ச்சிப் பண்ணைகள் நிறுவப்பட்டு வருவதும், உற்பத்தியைப் பெருக்க அம்மாநில சர்க்கார் பெரும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதும், இத்துறையில் கருதத்தக்கதாகும்.

ஐந்தாண்டுத் திட்டம்

இதுவரை ரூ. 885 கோடி செலவு

"இந்தியாவின் முதல் ஐந்து ஆண்டு திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன; 1954 மார்ச் இறுதி வரை செலவு மதிப்பீடு ரூ 885 கோடியாகும்; திட்டமிடப்பட்டிருக்கும் மொத்தத் தொகையில் இது 40 சதவிகிதமாகும்," என்று 5 ஆண்டுத் திட்டத்தின்படி நடைபெறும் வேலைகளைப் பரிசீலனை செய்த திட்டக் குழு வெளியிட்டிருக்கும் அறிக்கை கூறுகிறது. இவ்வறிக்கை பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்கண்ட செலவில் மத்திய அரசாங்கத்தின் பங்கு ரூ. 444 9 கோடியும், மாகாண அரசாங்கங்களின் செலவு ரூ 439.9 கோடியுமாகும்.

1954—55-ம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டிருக்கும் செலவுத் தொகை ரூ. 572 கோடியாகும். இதில், மத்திய அரசாங்கத்தின் செலவு ரூ 316 கோடியும், மாகாண அரசாங்கங்களின் செலவு ரூ. 216 கோடியுமாகும்.

இது, 1953—54-ம் ஆண்டின் மாற்றி நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையைவிட ரூ 215 கோடி அதிகமாகும்.

கீழ்க்கண்ட முக்கியமான துறைகளில் அதிகமாக்கப்பட்ட இத்தொகையை செலவழிப்பதென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

விவசாயம், சமூக நலன் திட்டம், நீர்ப்பாசனம், மின்சாரம் ரயில்வே, துறைமுகங்கள், பெரும் தொழில்கள், கல்வி, சுகாதாரம், வீடு கட்டுதல், உள்ளூர் வேலைகள் சீரமைப்பு.

இவற்றில் சமூக நலன் திட்டம், ரயில்வே, தொழில்கள், கல்வி, வீடு கட்டுதல், சீரமைப்பு ஆகியவற்றிற்கு திட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கும் தொகைகளுக்கும் கூடுதலாக செலவழிக்கப்பட்டிருக்கிறது.

நீர்ப்பாசனத்திற்காகவும், மின்சாரத்திற்காகவும் ஐந்து ஆண்டு காலத்தில் செலவழிக்க மதிப்பிடப்பட்டிருக்கும் ரூ 617 கோடியில் சுமார் ரூ. 300 கோடி இதுவரை செலவழிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாண்டில் இதற்காக ரூ 168 கோடி செலவழிக்கப்படக்கூடும்.

சிறிய நீர்ப்பாசனங்கள்

முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 112 இலட்சம் ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது; சென்ற மூன்று ஆண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்ட வேலைகளின் பயனாக 53 லட்சம் ஏக்கர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கும்; அல்லது கொண்டுவரப்படலாம்.

நிலத்தை பண்படுத்துதல்

ஐந்தாண்டுத் திட்டத்தில், மொத்தம் 14 இலட்சம் ஏக்கர் நிலத்தைப் பண்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தது; மூன்று ஆண்டு காலத்தில் (1951—54ல்) 8 இலட்சத்து 16 ஆயிரம் ஏக்கர் நிலம் பண்படுத்தப்பட்டிருக்கிறது.

டெலிவிஷன் டெலிபோன்

நண்பர்களைப் பார்த்துக் கொண்டே பேசலாமாம்!

டெலிபோன் மூலம் பேசுவதை மட்டும் கேட்பதுமன்றி நம்முடன் பேசுவோருடைய முகத்தையும் நேரிலே பார்க்கும்படி வகை செய்யும் முறை அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். இதன் மூலம் விஞ்ஞானிகளின் நீண்ட கால ஆராய்ச்சியும், மனிதனின் நீண்டகால கனவும் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறது. கலிபோர்னியாவைச் சேர்ந்த சாண்டியகோ நகரில் வைக்கல் ஆராய்ச்சிக் கூடத்தார் டெலிவிஷனின் அமைப்புகளுடன் கூடிய டெலிபோனை அமைத்து அதன் வெற்றியை மக்களுக்கு எடுத்துக் காட்டினார்கள் என்று தெரிகிறது.

பேசுவோரின் முகமோ அல்லது உடலின் ஒரு பகுதியோ தெரியும். இவை சாதாரண அளவுள்ள 17 அங்குல 'காதோட்' ஒளி குழாய்களில் அமைக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்த அமைப்புள்ள டெலிபோன் மூலமாக ஒருவர் பேசத் துவங்கியதும், அதனுடன் உள்ள டெலிவிஷனையும் தனது வேலையைத் துவங்கி பேசுவோரை நேரில் காணும்படி செய்கிறது என்று கூறப்படுகிறது.

அருமையான திட்டம்!

இப்போது நடைமுறையிலிருந்து வரும் இடைநிலைக் கல்வித் திட்டம் — அதாவது, எஸ். எஸ். எல். ஸி. படிப்போர், பரீட்சை எழுதித் தேர்ந்தவர், தேறாதவர் என்று நிர்ணயிக்கும் பகுதி—இன்னும் நீடிக்கப்படலாமா வேண்டாமா என்பது பற்றி இடைநிலைக் கல்விக் குழுவினரின் அடுத்தக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படுமென்று தெரியவருகிறது.

இப்போது நடைமுறையில் இயங்கிவரும் இந்த முறை நீக்கப்பட்டால், எஸ். எஸ். எல். ஸி. தேர்வு எழுதுகிறவர்கள் எல்லாரும், தேர்ந்தவர், தேறாதவர் என்ற வித்தியாசமில்லாமல் எல்லாருமே தேர்ந்தவர்களாகி விடலாம்!

திராவிட நாடு ஏன் பிரிய வேண்டும்?

நெடுஞ்செழியன் விளக்கம்

"இலங்கைக்குத் தமிழன் உழைத்துப் பிழைக்கச் சென்றான்—மார்வாரிகளைப்போல் வட்டிக் கடை வைத்துச் சுரண்ட அல்ல; பஞ்சாபியர்களைப்போல் போர்வீரர்களாக அல்ல; ஆனால், தமிழர்கள், தட்டுத் தூக்கிகளாகச் சென்றனர்; இன்று, அந்தத் தமிழர்கள், வெறுங் கையுடன் திரும்பி வருகிறார்கள்; சிந்திக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்—அந்த 8 லட்சம் தமிழரும் வடநாட்டினராயிருந்தால், மத்திய சர்க்கார் என்ன அடிதடித்திருக்கும்? எவ்வளவு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கும்?"

"நாமும், பஞ்சாபிகளும் ஒன்றாக இருக்க முடியாது—ஆனால், நாமும் கன்னடர்களும் ஒன்றாக இருக்க முடியும். இன்று, அகில இந்தியாவை ஒன்றுபடுத்துவது நேருதான்; நேருவுக்கும் பிறகு, நிச்சயம், அண்ணாவின் கைதான் ஓங்கி நிற்கும்."

"இலங்கை, இந்தியாவை வெறுக்கக்கூடாது; இந்தியாவுக்கும்—இலங்கைக்கும் இடையே இருப்பது 25 மைல்; ஆனால், பிரிட்டனுக்கும்—இலங்கைக்கும் இடையே 7,000 மைல்கள்; ஆகவே, இலங்கை உறவாட வேண்டியது இந்தியாவுடனேயன்றி, பிரிட்டனுடன் அல்ல."

—இவ்வாறு, சென்னை 14-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற திராவிட நாடு பிரிவினை வாரக் கொண்டாட்டத்தில் விரிவுரையாற்றுகையில், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.

சென்னை 14-வது வட்டம் கொத்தவால்சாவடி, தி மு கழக கிளையின் சார்பில் 26-9-54 ஞாயிறன்று 'திராவிட நாடு பிரிவினை' வாரம் கொண்டாடப்பட்டது. தோழர் க. செயராமன் தலைமை வகித்தார். தோழர்கள் க. அ. இரகுநாதன், கோ. செங்குட்டுவன் ஆகியோர் பேசியபின், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'திராவிட நாடு பிரிவினை' குறித்து நீண்டதோர் உரையாற்றினார்கள். தோழர் புருஷோத்தமன் நன்றி கூறிய கூட்டம் இனிது முடிந்தது. பெருமழையையும் பொருட்படுத்தாது ஏராளமான பொதுமக்கள் கூடியிருந்தனர்.

☆

தோழர் நெடுஞ்செழியன் மேலும் பேசியதாவது:—

"இன்று நடைபெறும் இக்கூட்டத்திற்கு அன்பர் ஆச்சாரியார் வந்திருந்தால், இவ்வட்டத்தில் உள்ள வைதீகர்கள், 'மகான் இன்று மாலை வருகிறார்; எனவே காலை முதல் மழை பெய்கிறது' என்று கூறுவர்; ஆனால், இப்போது பேசுவது தி. மு. கழகத் தோழர்கள்; ஆகையால், அவர்கள் என்ன கூறுவார்கள் தெரியுமா—'இன்று மாலை மாபாவி வருகிறான்; இவர்கள் கூட்டம் நடக்கக் கூடாதென்று வானமே மழையைப் பொழிய வைக்கிறது' என்று கூறுவார்கள்.

இந்த மழையினால் ஏற்படும் தொந்திரவு நமக்கு மட்டுமல்ல; ஆண்டவனுக்குக்கூட ஏற்பட்டிருக்கிறது. தில்லை நடராசன் கூட தெருக்களிலே பவனி வரும்போது மழை பெய்தால், சற்று ஒதுங்கி மழை நின்ற பின்தான் போவார். ஆண்டவனுக்கே இந்த ஆபத்து என்றால், நமக்கு?

தி. மு. கழகத் தோழர்கள் 5 ஆண்டுகள் முடிந்து 6-வது ஆண்டில் திராவிட நாடு பிரிவினை விழா கொண்டாடுகின்றனர். 1949 செப். 17-ல், வண்ணாரப் பேட்டையில் நடந்த மாபெரும் கூட்டத்தில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், தி. மு. கழகக் குறிக்கோள் என்ன? அது ஏன் தோன்றியது என்பன போன்ற காரணங்களைக் கூறினார்கள். அதை ஒட்டித்தான் செப்டம்பர் 17 முதல் ஒரு வாரம்வரை திராவிட நாடு பிரிவினை வாரம் கொண்டாடப்படுகிறது.

இந்நாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகள் உள்ளன. இன்று நாட்டை ஆளும் காங்கிரஸ் கட்சி, மத்திய சர்க்காருக்கு கீழே மற்ற மாகாண சர்க்கார்கள் இருந்தால் போதும் என்று கருதுகிறது.

பெரிய பெரிய திட்டங்களைப் போடுதல், பாதுகாப்புப் படைகளை வைத்திருத்தல், வெளிநாட்டு விவகாரங்களை தானே வைத்திருத்தல் ஆகிய இத்தகைய அதிகாரங்களைக் கொண்ட பலம் பொருந்திய மத்திய சர்க்காரின் கீழ் இந்தியா இருந்தால்தான் நாடு நலமுறும் என்று கூறுகின்றனர்.

கம்யூனிஸ்டு தோழர்களோ, ஐக்கிய தமிழகம், ஐக்கிய ஆந்திரம், ஐக்கிய கேரளம், ஐக்கிய கன்னடம் என்று சோவியத்தில் உள்ளதைப் போலவே நம் நாட்டிலும் வைத்துக் கொள்ளலாம் என்று கூறுகின்றனர்.

சோஷலிஸ்டுகள், சோஷலிச அடிப்படையில் அரசாங்கம் நடக்கவேண்டும் என்கிறார்கள்.

தமிழரசுக் கழகத்தார், தங்களைக் கலாச்சாரக் கழகம் என்று கூறிக்கொண்டாலும், சில சமயங்களில் அரசியலில் தலையிடுகிறார்கள்; அவர்கள் கூறுவதெல்லாம், 'தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும்,' தமிழகம் டெல்லியுடன் சேர்ந்திருக்கலாம்; ஆகையால், இந்திய யூனியனே போதும்,' என்கிறார்கள்.

தி. மு. கழகத்தவராகிய நாமும், திராவிட கழகமும், தமிழகம், ஆந்திரம், கன்னடம், மலையாளம் ஆகியவைகள் மொழி வழியில் பிரிந்து, வடநாட்டு ஆதிக்க எதிர்ப்பு வழி ஒன்றுபட்டு, சுதந்திர சோஷலிஸ திராவிடக் கூட்டாட்சியாக மலர வேண்டுமென்று கூறுகிறோம்.

இதைத்தான் சிலர் குறை கூறுகின்றனர்; ஒன்றாகவே இருக்கலாம் என்கின்றனர்.

உலகம் எல்லாம் ஒன்றாகவே இருக்கட்டும்; பண்டித நேருவே அதன் தலைவராக இருக்கட்டும்; ஆசியாவின் ஜோதியே! நீர் இந்தியாவை நன்கு நிர்வாகம் செய்தீர், ஏழு ஆண்டுகளில் இந்தியாவை முன்னேறச் செய்தீர்! ஆகையால் நேருவே, நீரே உலகிலுள்ள 96 நாடுகளுக்கும் சேர்த்து உலகத் தலைவராக இருங்கள்' என்று கூறுகிற அளவுக்கு உலகம் இன்று இல்லை.

ஒவ்வொரு நாடும் தங்களின் மக்களைப் பற்றித்தான் கவலைப்படுகிறது; ஒவ்வொரு நாடும் தனக்கென்றிருக்கும் எல்லைக்குள்ளிருக்கும் மக்களைப்பற்றித்தான் கவலைப்படுகின்றது; தன் நாட்டு மக்களுக்கு உணவு, உடை, இருக்க இடம் முதலியவற்றை சரிவர அளிக்கத்தான் ஒவ்வொரு நாடும் கவலைப்படுகின்றது.

நாமும், வடநாட்டாரும் சேர்ந்திருக்க வேண்டுமென்பதற்கு அடிப்படைக் காரணமென்ன? நமக்கும், வடநாட்டாருக்கும் எந்தவிதத்தில் ஒற்றுமை இருக்கிறது?

தமிழர்கள் உடுப்பது நாலு முழம், உடுப்பது நான்கு முழம்; ஆனால் அவன் இருபது கஜம் அல்லது 30 கஜம் அளவை உடுத்திக் கொள்கிறானே!

தமிழன் உணவு ரசம், சாம்பார், சோறு, வடுமாங்காய்; ஆனால், அவன் சப்பாத்தியை வரட்டியைப்போல் தட்டி அல்லவா சாப்பிடுகிறான்?

இவன் மொழி அவனுக்குப் புரியாது; அவன் மொழி இவனுக்குப் புரியாது; ஆனால், இவர்கள் இருவரும் ஒன்றுப் இருக்க வேண்டும் என்று கூறுவதற்குக் காரணம் என்ன? ஒன்றுப் இருப்பதால் இலாபமென்ன?

உதாரணத்துக்கு ஒன்று கூறுகிறேன்—'காஷ்மீர் பாகிஸ்தானுக்கா அல்லது இந்தியாவுக்கா,' என்பது இப்போதுள்ள தகராறு. நமக்கும், காஷ்மீருக்கும் என்ன சம்பந்தம்? ஆனால், நம் வரிப் பணம் பல கோடி ரூபாய் பாழாக்கப்படுகிறது. நம் போர்வீரர்கள் அங்கே போய்ப் பாடுபடுகிறார்கள். கொரியாவுக்கும் போகிறதா நம் வரிப் பணம்? ஈராக்குக்கும் போகிறதா? காஷ்மீர் எப்படிப் போனால் நமக்கென்ன?

காரணம் என்னவென்றால், நேரு காஷ்மீரில் பிறந்தார்; ஆகையால், டில்லி தர்பாரிலிருந்து நம் வரிப் பணம் பாழாகிறது.

நான்கைந்து ஆண்டுகளுக்கு முன் சென்னை நகரசபை வரவேற்பில் கலந்துகொண்ட நேரு கூறினார்—'நான் இங்கே வரவேற்பில் இருக்கிறேன். ஆனால், என் எண்ணமெல்லாம் காஷ்மீரில் இருக்கிறது,' என்று. இதில் இருந்தே தெரிந்து கொள்ளலாம், காஷ்மீர் பிரச்சினையில் மறைந்திருக்கும் உண்மையை!

பாகிஸ்தானில் இருந்து வந்த வடநாட்டு அகதிகளுக்கு செலவிடப்பட்ட தொகை 241 கோடி ரூபாய்கள்; ஏன் இவ்வளவு தொகை செலவிடப்பட வேண்டும்? திராவிடம் தனியாக இருந்திருந்தால் இவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டிருக்குமா?

சென்னையில், வெளியூர் பல இடங்களில் வடநாட்டு அகதிகளுக்கு சர்க்கார் கடை கட்டித் தருகிறது; ரயில்வே ஸ்டேஷன்களில் டீ ஸ்டால்கள் வைக்க மார்வாடிகளுக்குத்தான் முதல் சலுகை; இதற்காக மாகாண சர்க்கார் மேலும் மேலும் செலவிடுகின்றது.

இதே நிலைமையில், இலங்கையிலிருந்து 8 லட்சம் தமிழர்களையும் இந்தியாவுக்கு அனுப்பப் போகிறேன்,' என்று கூறுகிறார் கொத்தலாவலை; இதைப்பற்றி மத்திய சர்க்கார் ஒரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை.

சமீபத்தில் சென்னை வந்த மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் சிந்தாமணி தேஷ்முக் அவர்களை, இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து பத்திரிகை நிருபர்கள் கேட்டதற்கு, சென்னை அமைச்சர் சுப்பிரமணியம் இதில்லை சமாளிப்பார்; என்று கூறிச் சென்றார்; சுப்பிரமணியத்தைக் கேட்டாலோ, 'காமராசர் ஏதாவது திட்டம் தருவார்,' என்கிறார்; காமராசரோ இலங்கையிலிருந்து வருபவர்கள் எப்படியாவது இடம் தேடிக் கொள்வார்கள்', என்று கூறுகிறார்.

இந்த நாட்டு சொந்த அகதிகளைக் காப்பாற்ற முடியாத நிலையில் மாகாண சர்க்கார் இருக்கிறது. ஆகவே வடநாட்டுடன் நாம் சேர்ந்திருப்பதால் என்ன லாபம்; வடநாட்டு அகதிகளுக்குச் செலவிட்டதைப்போல் மத்திய சர்க்கார் தமிழர்களுக்குச் செலவிடுமா?

இலங்கையில் [illegible] இருக்கும் தேசாய் ஒரு வடநாட்டார்; ஆகையால்தான், அவர் கவலைப்படாமல் இருக்கிறார். தென்னாட்டு அறிஞர் ஒருவர் [illegible] இருந்தால் இந்த நிலைமை இருக்குமா?

இனி, தமிழர்கள் ஏமாற மாட்டார்கள்; விழித்தெழுந்து போகிறார்கள்; வேலையில்லாத் திண்டாட்டம் நிச்சயம் பெருகும்; ஆகவே, நாம் கேட்பதெல்லாம், 'வடநாட்டு அகதிகளுக்குச் செய்து தரப்பட்ட வசதி தென்னாட்டு அகதிகளுக்கு எங்கே என்பது தான்!

இன்று திருவாங்கூரில் இருக்கும் இவ்வளவு சீர்கேடான நிலைமைக்கு யார் காரணம்? நேரு தான். எத்தனை முறை திருவாங்கூர் மக்கள் கூறினர்; 'திரு-கொச்சி தமிழ்ப் பகுதியைத் தாயகத்துடன் சேர்க்கும் பிரதிநிதிகளுக்குத்தான் எங்கள் ஓட்டு,' என்று ஒரு முறையல்ல—மூன்று முறைகள் கூறியுள்ளனர். நடந்த பொதுத் தேர்தலில் கூடக் கூறினரே!

இன்று திரு-கொச்சி தமிழ்ப் பகுதியை, நேரு, தமிழகத்துடன் சேர்த்திருப்பாரானால் பட்டம் தாணு, ஓட்டு கொண்டு வந்தா ஜெயித்திருப்பார்? பட்டம் தாணுவாகப் பார்த்துத் திரு-கொச்சி தமிழ்ப்பகுதியைக் கொடுக்க முடியாது; கொடுக்கும் அதிகாரமும், மறுக்கும் அதிகாரமும் நேருவிடம்தான் இருக்கிறது.

பட்டம் தாணு சமீபத்தில் சட்டசபையில் பேசுகையில், "நேரு இல்லாவிட்டால் காமராசர் படைபெற்று வந்து திரு-கொச்சி தமிழ்ப் பகுதியை ஜெயித்திருப்பார்; ஆகவே, நாம்,

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தியா – காஷ்மீர் – பொருளாதார இணைப்பு!

(:)

பாக். சர்க்காரின் ஆட்சேபக் குறிப்பு!

ஐ. நா. சபை விவாதிக்குமா?

இந்திய யூனியனுடன் காஷ்மீர் பொருளாதார ரீதியாகப் பிணைக்கப்படுவதை எதிர்த்து பாகிஸ்தான் அரசாங்கம் ஆட்சேபக் குறிப்பொன்றை இந்திய அரசாங்கத்திற்கு தாக்கல் செய்யும் என்று தெரிகிறது.

இரண்டு நாடுகளும் ஏற்கெனவே ஒத்துக்கொண்டிருக்கிறபடி, காஷ்மீர் மக்கள் தங்கள் எதிர்காலத்தை தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையை, இந்திய அரசாங்கத்தின் இந்தப் புதிய நடவடிக்கை பாதிக்கும் என்று பாகிஸ்தான் அரசாங்கம் அனுப்புகிற ஆட்சேபக் குறிப்புத் தெரிவிக்கும் என்றும் தெரிய வருகிறது.

இந்திய அரசாங்கம் காஷ்மீருடன் செய்துள்ள இந்தப் பொருளாதார இணைப்பை ஆட்சேபித்து, ஐ. நா. சபையின் பாதுகாப்புக் கவுன்சிலுக்கும் பாகிஸ்தான் குறிப்பொன்றை அனுப்புவதுடன், ஐ. நா. சபை மீண்டும் காஷ்மீர் பிரச்னையைப் பரிசீலிக்க வேண்டும் என்றும் கோருமெனவும் சொல்லப்படுகிறது.

நூற்றுக்கணக்கானவர்களைக் கொள்ளைகொண்ட கோர இரயில் விபத்துக்கள்!

1937-ம் வருட முதல் இன்றுவரை விவரம்

1937 ஜூலை 17—பிஹ்டா: 126 உயிரிழந்தனர்; 200 பேர் காயம்பட்டனர்.

1939 ஏப்ரல்—மஞ்டிபா: 34 பேர் இறந்தனர்; பலருக்குக் காயம்.

1940 மே 15—ஜலோத் அருகே பிராண்டியர் எக்ஸ்பிரஸ் 18 பேர் கொல்லப்பட்டனர்; 20 பேர் காயம்பட்டனர்.

1940 ஆகஸ்ட்—ஐயம்பூர் அருகே டாக்கா மெயில் கவிழ்ந்தது: 36 பேர் இறந்தனர்; 90 பேர் காயம்பட்டனர்.

1942 மே 16 — ஆர்டால் (சிந்து): 23 பேர் இறந்தனர்; 27 பேர் காயம்பட்டனர்.

1943 நவம்பர் 14—சேர்தனூர் (சென்னை): 30 பேர் கொல்லப்பட்டனர்: 100 பேர் காயம்பட்டனர்.

1945 மார்ச் 22—ஜங்ஷாஹி (சிந்து): 24 பேர் இறந்தனர்; 46 பேர் காயமடைந்தனர்.

1945 ஜூலை 28—மோகல் சராய்: 17 பேர் இறந்தனர்; 5 பேர் காயம்பட்டனர்.

1947 மே 17—காயன்பூர் அருகே சர்மா எக்ஸ்பிரஸ்: 33 பேர் இறந்தனர்; 61 பேர் காயம்பட்டனர்.

1947 ஆகஸ்ட் 28—கோலாகட்: 17 பேர் இறந்தனர்; 118 பேர் காயம்பட்டனர்.

1948 மே 15 — தான்பாத் அருகே டேராடூன் எக்ஸ்பிரஸ்: 31 பேர் இறந்தனர்; 101 பேர் காயம்பட்டனர்.

1948 செப். 15—பிலிபிட் (உ. பி): 24 பேர் மாண்டனர்; 29 பேர் காயம்பட்டனர்.

1950 ஜன. 29 — சர்ஹிந்த் அருகே காஷ்மீர் மெயில்: 65 பேர் இறந்தனர்; 112 பேர் காயம்பட்டனர்.

1950 ஏப். 12—பாரேலி அருகே டேராடூன் எக்ஸ்பிரஸ்: 87 பேர் இறந்தனர்; 157 பேர் காயம்பட்டனர்.

1950 மே 7—அம்பாலா பாசஞ்சர் வண்டி: 95 பேர் இறந்தனர்; 92 பேர் காயம்பட்டனர்.

1950 ஆக. 13—போன் எக்ஸ்பிரஸ்: 29 பேர் இறந்தனர்; 200 பேர் காயம்பட்டனர்.

1952 மே 19—பீகானிருக்கும்—பாலனூருக்கும் இடையே: 45 பேர் கொல்லப்பட்டனர்.

1953 ஏப்ரல் 1 — கோரக்பூர் அருகே: 31 பேர் கொல்லப்பட்டு 82 பேர் காயமடைந்தனர்.

1954 ஜன. 21—ஜிம்பூர் அருகே பாகிஸ்தான் மெயில் கவிழ்ந்த திலும் குறைந்தது 60 பேராவது கொல்லப்பட்டனர்.

1954 பிப். 8 — குளர் ஸாகட்கஞ் (மிர்ஜாபூர் மாவட்டம், உ. பி.): 80 பேர் இறந்தனர்;

சட்டத்தால் சினிமாவைத் தடுக்கக் கூடாது!

மக்களைத் திருத்த அது பயன்படும்

'மந்திரமா-தந்திரமா'

3—10—54 காலை 9 மணிக்கு சென்னை, வெரப்பூர் வீனஸ் தியேட்டரில், பெரம்பூர் அறிவியக்க மன்றச் சார்பில் தோழர் அம்பாசாமி குழுவினரால் 'மந்திரமா-தந்திரமா' என்பதை விளக்கப்படும். தோழர் டி. என். வேணுகோபால் தலைமையில் தோழர்கள் கண்ணதாசன், க. அம்பாதுரை, டி. கே. சீனிவாசன், தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசுவர்.

3 இலட்சம் ரூபாய் சேதமாம்!

இரயில் விபத்து பற்றி மேல் விவரங்கள்

சென்ற திங்கட் கிழமை இரவு ஹைதராபாத் — காசிபெட்டுக் கிடையே நடைபெற்ற கோர இரயில் விபத்து பற்றிய தகவல்களின், இரயில்வேயிக்கு சுமார் 3 இலட்சம் ரூபாய்க்கு மேல் சேதமாயிற்று என்று கூறப்படுகிறது.

இந்த விபத்தில் சிக்கி மரணமடைந்தோர்களுக்கு நஷ்டஈட்டுத் தொகையை நிர்ணயிக்க ஒரு அதிகாரி நியமிக்கப்படுவார் என்று இரயில்வே அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி கூறியிருக்கிறார்.

இரயில் விபத்தில், பத்திரிகைகளில் வெளியிடப்பட்டபடி மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 400 அல்ல என்றும், அந்த வண்டியில் பிரயாணம் செய்தவர்களின் எண்ணிக்கையே மொத்தம் 380 தான் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இதுவரை அறிக்கைப்படி, மொத்தம் மரணமடைந்தவர்கள் 135 பேர் என்றும், காயமுற்றோர் 126 என்றும், விபத்திலிருந்தும் தப்பித்துக் கொண்டவர்கள் 119 பேர் என்றும் கூறப்படுகிறது.

இரயிலில் பொருத்தப்பட்டிருந்த பெட்டிகளில் 6 பெட்டிகள் எடுக்கப்பட்டுவிட்டன என்றும், பாதை செப்பனிடப்பட்டு வருகிறது என்றும், சென்னைக்கு வரும் பெட்டிதான் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

விபத்தில் மாண்டவர்களில் சுமார் 55 பேர்களின் உடல்கள் நசுங்குண்டு, சின்னாபின்னமாகக் கிடந்தனவென்றும், அவைகளே, மதச் சடங்குகளுடன் தகனம் செய்யப்பட்டது என்றும், காணமற் போன பிரேதங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சி நிறுத்தப்பட்டுவிட்டதென்றும் தெரிய வருகிறது.

ஜமேதார் ஜி. வி. கே. ராவ் என்பவர், ஆற்று வெள்ளத்தோடு அடித்துச் செல்லப்படுகையில் அவர் ஒரு மரத்தைப் பற்றிக் கொண்டதாகவும், அதிகக் காயம் எதுவும் படாமல் உயிர் பிழைத்ததாகவும் தெரிகிறது! அவரைப் போலவே, ஆற்று வெள்ளத்தில் மிதந்து சென்று கொண்டிருந்த ரயில் கட்டை ஒன்றைத் தொற்றிக்கொண்டு வக்கீல் ஒருவர் தப்பிக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

வசந்தி நதியின் கரைகளில் சிதறிக் கிடந்த சாமான்களைத் திருடியதாக இரண்டுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் சிக்கி இறந்தவர்களில் ஒரு தாய் இறந்து கிடந்ததாகவும், அவளருகில் சுமார் 1 வயதுள்ள அவளது குழந்தை உயிருடன் அழுது கொண்டிருந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன.

நீதிபதி மாக் கருத்து!

சென்னை, செப். 30—

"சினிமாக் காட்சிகள் நாட்டைச் சீர்திருத்திப் புதியதாக அமைப்பதற்கு பெரும் அளவு பயன்படக்கூடிய ஒரு சாதனமாகும்; சினிமா மூலம், உலக மக்கள் எல்லோரும் மனித இனத்தைச் சேர்ந்தவர்களே; எல்லா மக்களுக்கும் உணர்வு, ஆசை, பிரச்சினைகள் உண்டு என்பதை தெரிந்துகொள்ளச் செய்யவும் முடியும்; ஆனால், சில குறைகளும் இன்று வெளிவருகிற சினிமாப் படங்களில் இருக்கத்தான் செய்கின்றன; இளைஞர்கள் கூட்டம் கூட்டமாகச் செல்கிறார்கள்; ஆனால், அவர்கள் பார்க்கத் தகுந்தவைகளாக பல படங்கள் இருப்பதில்லை; அதற்காக, சினிமாவிற்கு இளைஞர்கள் செல்லக் கூடாதெனச் சட்டம் விதிப்பதையும் நான் விரும்பவில்லை; சட்டத்தினால் அதைச் சரிவரச் செய்ய முடியாது; மக்களது கருத்தைத் திரட்டி அவைகளுக்கேற்ப சினிமாக்களை, 15 வயதுக்கு உட்பட்டவர்களும் பார்க்கக் கூடியனவாகத் தயாரித்து வெளியிடுவதில் சினிமா ரசிகர் சங்கங்கள் கவனம் செலுத்த வேண்டும்; கிராமப் பகுதிகளுக்கும், கல்வி பரப்பும் சாதனமாகக் கூடப் பயன்படுத்த முடிந்த சினிமாக் காட்சிகள் காட்டப்படவேண்டும்; அவை, நாட்டு மக்களின் வாழ்வை புனர் நிர்மாணம் செய்வதில் பெரும் பங்கு கொள்ளும்,"

என்று, சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி மாக் என்பவர் அமெரிக்க செய்தி அறிவிப்பு நிலையத்தின் கட்டிடத்தில் சினிமா ரசிகர் சங்கத்தார் ஏற்பாடு செய்து நடத்திக் காட்டிய 'ஆப்ரகாம் லிங்கன்', 'உலகம் உங்கள் வீட்டு வாயிலில்' என்ற இரு சினிமாக் காட்சிகளைப் பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கழகக் கூட்டம்

✶

லால்பேட்டை

தி. மு. க. ஆண்டு விழா

சிவன் கோயிலுக்கு அருகில்
5—10—54 மாலை 5 மணிக்கு
தலைவர்: கு. கோவிந்தராசு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
பொ. சொக்கலிங்கம்
லா. ந. இராமலிங்கம்
கோ. கி. மூர்த்தி

பொதுக்கூட்டம்

3—10—54 மாலை 6-30 மணிக்கு, பட்டுக்கோட்டை போஸ்டாபீசுக்கு எதிரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கே. ஏ. மதியழகன், சி. பி. சிற்றரசு, ரா. செனார்த்தனன் ஆகியோர் பேசுவர்.

தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர் சம்மேளன ஊழியர் மாநாடு

3—10—54 காலை 9 மணிக்கு சென்னை மெமோரியல் மண்டபத்தில் சென்னை ஜில்லா தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் ஆதரவில் மேற்படி மாநாடு தோழர் ஜி. வெங்கடப்பா தலைமையில் நடைபெறும். தோழர் டி. டி. ராஜன் மாநாட்டைத் திறந்து வைப்பார்.

சென்னை 87-வது வட்ட தி.மு.க. உறுப்பினர்கட்கு

3—10—54 காலை 9 மணிக்கு கழகப் பணி மனையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் ஆண்டு விழாக் கூட்ட வரவு-செலவு கணக்கும், 2 மாத வரவு-செலவு கணக்கும், மற்றும் பல முக்கிய பிரச்னைகளைப் பேசி முடிவு செய்யப்படும்.

அமெரிக்க அரசாங்க....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேல் ஒப்பந்தத்தின் இரண்டு பிரிவுகளை திருத்தியமைக்குமாறு இந்தியா கோரியதாகவும், அமெரிக்க அரசாங்கம் இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற மறுத்து விட்டதுமே என்று சொல்லப்படுகிறது.

இந்த விமானம் போக்குவரத்துக்கான ஒப்பந்தம் 1955 ஜனவரி 16-ம் தேதியுடன் காலாவதியாகிறதாம்.

சென்னை சினிமா சட்டம் செல்லாது!

சர்க்காரின் செய்திப் படங்களைக் காட்ட வேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது!

தலைமை உயர் நீதிமன்றத் தீர்ப்பு

புதுடில்லி, அக். 1—

மாநில அல்லது மத்திய அரசாங்கம் குறிப்பிடுகிறபடி, அங்கீகரிக்கப்பட்ட படம் ஒன்றை, ஒரு குறிப்பிட்ட அளவு நீளமுள்ள சினிமா படத்தை, சினிமா தியேட்டர்களில் கட்டாயமாகக் காட்ட வேண்டும் என்ற 1918-ம் வருடத்திய சென்னை அரசாங்க சினிமா சட்டம், அரசியல் சட்டத்தின் 19(1) (ஜி) பிரிவிற்கும் புறம்பானதாக உள்ளதெனக் கூறி, டெல்லி தலைமை உயர்நீதிமன்றம், சென்னை சினிமாச் சட்டம் செல்லாது எனக் கூறியுள்ளது.

சினிமாச் சட்டப்படி, சாதாரணமாக சினிமாக் காட்சிகள் காட்டும்போது, மாநில, மத்திய அரசாங்கங்கள் அங்கீகரிக்கிற படங்களை, கட்டாயமாகக் காட்ட வேண்டுமென்றும், அப்போதுதான் சினிமாத் தியேட்டருக்கான அனுமதி வழங்கப்படும் என்றும் விதிகள் இருக்கின்றன.

திருத்துறைப் பூண்டியில் பிரதானமான சினிமாத் தியேட்டர் வைத்திருக்கிற ஆர். எம். சேஷாத்திரி என்பவர், இந்த விதி தனது சுதந்திரத்தைப் பறிப்பதாக இருப்பதாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். ஆனால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

தலைமை உயர்நீதி மன்றத்தில் மீண்டும் அப்பீல் செய்து கொண்டதில் அந்த "சர்க்கார் அங்கீகரிக்கும் படங்களில் ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு தியேட்டர்களில் காட்டித்தான் ஆகவேண்டும் என்பது அரசியல் சட்டத்தில் 19 (1) (ஜி) பிரிவுக்கு புறம்பானது. மேலும் அரசாங்கம் அங்கீகரிக்கிற படங்கள், சம்மந்தப்பட்ட மக்களுக்கு அறிவூட்டுகிறவையில் பொதுஜன நலனுக்கு அவசியமானது என்பது பொருத்தமில்லாமலிருப்பதால் அவைகளைக் காட்டித்தான் ஆகவேண்டும் என்பது சரியல்ல."

என்றும் கூறி அந்தவிதி பட்டியலின் எதுவுமின்றியே சினிமா தியேட்டர்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமெனத் தீர்ப்பளித்துள்ளது.

விற்பனையாகிறது!

S. S. A. கபீர் படைத்த பகுத்தறிவுப் போர்வாள்!

ஏழை நாள்

(மாது சகோதரர்களின் முதல்தர மூவர்ண முகப்புடன்)

பக்கங்கள்: 164

தனிப் பிரதி ரூ. 1-4-0, விற்பனையாளர்கட்கு 25•/. கழிவு

விவரங்கட்கு: திராவிடன் பதிப்பகம்,
P. B. No. 18, வேலூர் (வ. ஆ.)

ஆச்சாரியாரின் அபிலாஷை நிறைவேறுகிறது!

'ராமன் காடேக, பரதன் நாடாள' பைத்தியத்தின் கட்டளை!

திருவல்லிக்கேணி மணிக்கூண்டில் 'தசரத தர்பார்'

சென்னை, செப். 30—

திருவல்லிக்கேணி பைகிராப்ட்ஸ் ரோடில் உள்ள மணிக்கூண்டில், ஒரு பைத்தியம் ஏறிக்கொண்டு 'தசரத தர்பார்' நடத்த ஆரம்பித்துவிட்டதாக செய்தி வெளிவந்துள்ளது.

தென் ஆற்காடு மாவட்டம், சசி கிராமத்தைச் சேர்ந்த வடிவேலு என்கிற 35 வயதுடையவர், மூளைக் கோளாறு கண்டவராய், இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்தவர், திடீரென 40 அடி உயரமுள்ள மணிக்கூண்டில் ஏறிக்கொண்டார். போலீசாரும், இன்னும் பலரும் வேண்டிக் கொண்டும் அவர் மணிக்கூண்டைவிட்டு இறங்க மறுத்துவிட்டாராம்.

இறங்கச் சொல்லால் அடித்துவிடுகின்றனர்; அப்படியும் பயனில்லை; வைத்தியம், 'பக்கத்தில் உள்ள மரத்தில் தொங்கி மடேரென உயிரைப் போக்கிக் கொள்வேன்,' என்றும் '40 அடி உயர மணிக்கூண்டிலிருந்து கீழே குதித்துவிடுவேன்,' என்றும் கேஷ் பயமுறுத்தியதாம்!

"ராமனே, நீ காடேகு! பரதனே, நீ நாடாளு!" என்று வேறு 'தசரத தர்பார்' நடத்தி வருகிற வகையில் கூச்சலிட்டதாம்.

பின் நீடவைக்கும் படையினர் வந்து, தங்களிடமிருந்த ஏணி மூலமாக மிகவும் சிரமப்பட்டும், வைத்தியத்தை மணிக்கூண்டிலிருந்து இறக்க முடியவில்லை.

பின் நற்செயலாக மணிக்கூண்டிலிருந்து வைத்தியம் தானாகவே இறங்க ஆரம்பித்தது. போலீசார் அவனைப் பிடித்து உடற்பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

பட்டு ஆலையில் தீ விபத்து

ரூ. 7 லட்சம் நஷ்டம்

பம்பாய், அக். 1—

பம்பாயின் மத்திய பாகத்திலுள்ள டார்டியோவில் ஏற்பட்ட பெரியதோர் தீ விபத்தின் காரணமாக இரண்டு பட்டு நெசவு மில்களும், இரண்டு சாயத் தொழிற்சாலைகளும் சேதமுற்றன.

இரண்டு பட்டு நெசவு ஆலைகளும் அடியோடு சாம்பலாகி விட்டன என்றும் கூறப்படுகிறது. சுமார் 7 லட்ச ரூபாய்க்குமேல் சேதமான அளவு சேதமேற்பட்டிருக்கலாமென்று கணக்கிடப்படுகிறது.

திராவிட நாடு......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நேருவின் தயவால்தான் இங்கு ஆலை வைத்திருக்கிறோம், என்றார். ஆகவே, திரு-கொச்சி தமிழர்களின் அவலத்துக்குக் காரணம் நேருதான். இப்போது அங்கு அடக்குமுறை பிரயோகம் செய்ததற்காக விசாரணை செய்யப்படுகிறது. இதில் என்ன ஆச்சரியம் என்றால், எந்த நீதிபதி அடக்குமுறைப் பிரயோகத்திற்கு உத்தரவு கொடுத்தாரோ அவரே தான் இன்று விசாரணை செய்பவர்! எனவேதான், கேரள சர்க்காரை வற்புறுத்துகிற மாதிரியில் இங்கு தீர்மானமும் நிறைவேறியுள்ளது.

ஆயுதக் குறைப்பு

ரஷ்யாவின் புது திட்டம்

நியூயார்க்கில் நடைபெற்று வரும் ஐ. நா. சபைக் கூட்டத்தில், ரஷ்யப் பிரதிநிதி விஷின்ஸ்கி, ஆயுதக் கட்டுப்பாடு சம்பந்தமாக புதிய ஒரு திட்டம் கொண்டுவந்தார்:—

"இன்னும் 6 மாதங்களுக்குள் ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டின் படைபலத்தைப் பாதியாகக் குறைத்துக்கொள்ள வேண்டும்; ஐ. நா. சபையோன்றுக் குழுவில் அதிகாரத்தால் கூட்டப்பட்ட ஆயுதக் கட்டுப்பாடு மேற்பார்வைக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும்; தற்காப்புக்கு மட்டுமே அணு ஆயுதங்களை உபயோகிக்க வேண்டும் என்ற மேல் நாடுகளின் யோசனையை அந்தக் குழு தெளிவாக்க வேண்டும்; ஆயுதக் குறைப்பு நடைமுறைக்கு வந்தவுடன் அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு களை தயார் செய்வதை உடனடியாக நிறுத்தவேண்டும்," என்பதே அவர் கொண்டுவந்த திட்டமாகும்.

இந்தியாவின் ஸ்டர்லிங் நிலுவை இறங்குமுகம்!

இந்தியாவின் ஸ்டர்லிங் நிலுவை கைவசம் இருப்பு 1951—52-ல் 761 கோடி ரூபாயாக இருந்தது; அது, 1952 ஜூலையில் 673 கோடி ரூபாயாக இறங்கியது.

1953-ம் ஆண்டில் முதல் மூன்று மாதங்களில் மீண்டும் 700 கோடியாக உயர்ந்தது; 1954-ல் தொடர்ந்து நிலுவை உயர்ந்து கொண்டே வந்தது; ஆனால் இப்போது மீண்டும் ஸ்டர்லிங் நிலுவை இறங்கு முகத்தில் இருக்கிறதாம்.

இன்று நிலுவை 730 கோடி ரூபாய் உள்ளது. இது, திட்டக் குழு வேலை ஆரம்பித்த காலத்தில் இருந்ததைவிட ரூ. 150 கோடி குறைவானதாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: இ. வ. அண்ணாதுரை எம். ஏ.